# கலைஞரின் நாடகங்கள் இரண்டு தொகுதிகள் - என்.சி.பி.எச். வெளியீடு!

முத்தமிழ் அறிஞர் கலைஞர் எழுதிய நாடகங்கள் இதுவரை தொகுப்பு நூல்களாக வெளிவரவில்லை. ந.முருகேச பாண்டியன் பதிப்பாசிரியராக இருந்து இந்த முயற்சியில் இறங்கி என்.சி.பி.எச்.புத்தக வெளியீட்டு நிறுவனத்தின் மூலம் வெளியிட்டு இருக்கிறார். கலைஞரின் பெரு நாடகங்களையும் ஓரங்க நாடகங்களையும் 17 நாடகங்களாக இரண்டு தொகுதிகளாக அவர் தொகுத்து இருக்கிறார். முதல் தொகுதியில் ஏழு நாடகங்களையும் இரண்டாம் தொகுதியில் பத்து நாடகங்களையும் இடம் பெறச்செய்து இருக்கிறார். முக்கனிப் பிழிந்து வடித்தொன்றாய் கூட்டி சர்க்கரையும் கற்கண்டும் தீம்பருப்பும் ஒரு பிடி விரவி இளஞ்சூட்டில் ஏற்றி இறக்கிடும் இனித்த சுவையாய் இருக்கும் அவரது நாடகங்கள்-பார்க்க; படிக்க!

தம் வாக்குத் திறத்தாலே வையத்தை ஆண்ட பாரதியைப் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் 'கற்பூரச் சொற்கோ' என்று பாராட்டினார். முத்தமிழ் அறிஞர் கலைஞரின் சொற்சித்திரங்களைப் பொதிகையின் தென்றல் எனலாம். சிலபோது அதில் உள்ள சீற்றங்களைச் சூறாவளி எனக் கூறலாம். நவரசங்களை வித்தாக்கி நிற்கும் அதில் வானவில் நிறங்காட்டும் அதன் சோபிதங்களைப் பல பரிமாணங்களில் எடுத்துரைக்கலாம்.

கலைஞர் ஒரு பல்கலைச்செல்வர். அறிஞர் அண்ணாவைப் போலவே அத்தனை ஆற்றல்களையும் கைவரப் பெற்றவர். அறிஞர் அண்ணாவை விட கலைஞர் 15 வயது இளையவர். ஆனால் இருவரும் சமகாலத்தில் கலைத் துறையில் ஈடுபாடு கொண்டவர்களாக விளங்குகிறார்கள். 'கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல்' என்பார் திருவள்ளுவர். கேட்டோர் பிணிக்கும் சொற்களைப் பெய்து காட்டி எழுத்துகளை ஓவியமாக்குவதில் கலைஞர் வல்லவர்; சித்திரக்காரர்.

பதிப்பாசிரியர் முருகேச பாண்டியன் 24 பக்கங்கள் கொண்ட விரிவான பதிப்புரையை இந்த இரண்டு தொகுதிகள் குறித்து எழுதியிருக்கிறார். அப்படி எழுதுவதற்கான தேவை இருக்கிறது. வாசகர்கள் கலைஞரின் இந் நூல்களில் இடம் பெற்ற நாடகங்கள் தோன்றியதற்கான அனைத்துச் செய்திகளையும் அறிய முருகேச பாண்டியனின் பதிப்புரை உதவுகிறது. மேலும் ஒவ்வொரு நாடகத்தையும் அதனைப் படித்துப் புரிந்து கொள்வதற்கு ஏதுவாக அதைப்பற்றிய ஒரு சிறு குறிப்பைப் பதிப்பாசிரியர் வழங்கியிருக்கிறார்.

**கலைஞர் வெறும் நாடக ஆசிரியர் மட்டுமில்லை. அவர் எழுத்தின் வடிவங்களாகத் திகழும் கவிதை, இசைப்பாட்டு, சிறுகதை, உரையாடல்கள், கடித இலக்கியங்கள் ஆகியவற்றைப் படைத்து பெரும் புகழ் அடைந்தவர். அதனால் சமூகத்தில் மாபெரும் மாற்றங்களை நிகழ்த்திக் காட்டியவர். தமிழக வரலாற்றில் என்றென்றும் நிலைத்து நிற்கக் கூடியவரின் நாடகங்களைத் தொகுத்து அதற்குப் பதிப்புரையை எழுதி முருகேச பாண்டியன் புகழ் அடைந்துவிட்டார். இருப்பினும் பதிப்புரையைப் பற்றி நாம் சில குறிப்புகளைப் பின்னர் சொல்ல வேண்டியவர்களாக இருக்கின்றோம்.**

கலைஞரின் எழுத்துகள் எந்த வகைப்பாட்டை சேர்ந்ததானாலும் அதில் இனிமை கோலோச்சும். அதன் உரை நடையில் ஓர் ஓசை உருவாகி ஒரு படையே நடை கொள்ளும். அவர் எழுத்தைப் பார்த்தாலும் நினைத்தாலும் படிக்க, பக்க நின்று கேட்டாலும் ஈர்த்தாலும் பிடித்தாலும் இத்தனைக்கும் இனித்த சுவை கரும்பாய் விளங்கக்கூடியன. இந்நாடகத் தொகுப்பின் உள்ளடக்கத்தில் அதனைக் காண முடியும். படிப்போர் அதனை உணர முடியும். எடுத்துக் காட்டிற்கு அவர் எழுதிய முதல் நாடகமாக நச்சுக்கோப்பையிலிருந்து காட்சியின் ஒரு பகுதியைக் கீழே முதலில் தருகின்றோம். அதற்கடுத்து கலைஞர் சாக்ரடீஸ் ஓரங்க நாடகத்திற்கு எழுதிய அறிமுக உரையைத் தருகின்றோம். இவ்விரண்டையும் படித்துப்பாருங்கள்.

**உயர்நிலைப் பள்ளிக் கல்வியை முடித்து ஒரே ஆண்டு ஆகியுள்ள ஒரு மாணவன் அவனின் முதல் படைப்பிலேயே கொள்கை வயமாய் ஓங்கி, அதை வெளிப்படுத்துவதைப் பார்க்க முடிகிறது. ஓரங்க நாடகத்தின் அறிமுக உரை 1950 களின் தொடக்கத்தில் எழுதியது. அந்த அறிமுக உரையின் உள்ளடக்கத்தின் செறிவையும் செழுமையையும் உணரலாம். இதோ, இப்போது அந்த நயங்களைச் சுவைத்துப் பாருங்கள்.**

## ஒவ்வொன்றும் தேனில் தோய்த்த பலாச்சுளை!!

**(1) சீன்:18 இடம்: பகுத்தறிவு மன்றம்**
**(பழனி, சிவகுரு) , (பழனி வாட்டமாயிருத்தல்), (பாட்டு)**

**சிவகுரு : தோழா! நேற்று நீ கூறியபடி கம்பராமாயணத்தையும் பெரியபுராணத்தையும் ஆதியோடு அந்த மாய் புரட்டிப் பார்த்தேன்.**

**பழனி : அதிலென்ன முடிவு கண்டாய் தோழா?**

**சிவ : முடிவு ஏது தோழா, அதில் ஒரு கவிதை தோன்றியது சொல்லட்டுமா?**

**பழ : சொல்லேன்,கேட்கலாம்.**

**சிவ : நக்கிக் குடிக்கின்றார் நம் புலவர்**
**கலைரசத்தை!**
**சொக்கித் துதிபாடும் சோதாவே! புரட்டிப்பார்**
**ஆபாசத்தைஅழகுத்தட்டில் ஊற்றி பாயாசம்**
**என்றுரைத்தால் பருகுவரோ பண்டிதர்?**
**கம்பரும், கிழாரும் நம்மருந் தமிழ்நாட்டில்**
**வெம்பிய கலை வகுத்தார்கள்.**
**கருத்துக்குக் கலையா? கட்டுப்பாட்டுக்குக்**
**கலையா? வெறுத்து ஒதுக்கும் காலமே!**
**நீ வேகமாய் வா!**
**எப்படிக் கவிதை?**

**பழ : ஆஹா! கவிதை என்ன அழகாய் இருக்கிறது? அதுவும் பாரதிதாசன் பிறந்த நாடல்லவா!**

**சிவ : ஆம் தோழா! 'கம்பன்வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்' என்பார்கள் முன்னோர்கள். ஆனால் 'பாரதிதாசன் வீட்டுப் பானை சட்டியும் பண்ணமைக்கும்' என்பது இன்றைய தமிழகத்தின் திருமொழிதோழா!**

★ ★ ★

(2) "சாக்ரடீஸ் கிரேக்கம் தந்த தத்துவாசிரியன்; ஏதென்ஸ் அளித்த ஒப்பற்ற அறிவுப் புதையல்!

அவன் தயாரித்த பிளேட்டோ இன்றைய அரசியல் கருத்துப் பலவற்றிற்குத் தந்தையாக இருக்கிறான்.

மார்க்சும் ஏங்கெல்சும் தயாரித்த லெனின், ஸ்டாலின் போன்றோரால் புடம் போட்டு எடுக்கப்பட்ட பொன்னான பொதுவுடைமைத் தத்துவம், பிளேட்டோ என்னும் சிந்தனை உலைக் கூடத்தில் தயாரானதுதான்!

ஹெகல் என்னும் ஜெர்மன் நாட்டுத் தத்துவ ஞானி பிளேட்டோவின் உலைக்கூடத்தைப் பயன் படுத்தினான். புளித்துப் போன நாசிசக் கருத்துகளுக்கு 'ஜாடை' காட்டினான். அந்தக் கட்டாரியைக் கொண்டு தவறான வழியில் பயன்படுத்தித் தலை கொய்யப் புறப்பட்டனர், இட்லர், முசோலினி போன்ற புல்லர்கள்! இது போன்ற நல்லனவற்றிற்கும் தீயனவற்றிற்கும் மூலப் பொருள் உதவியவன் பிளேட்டோ அந்தப் பிளேட்டோவைத் தயாரித்தவனோ சாக்ரடீஸ்!

வரலாறு கூறுகிறபடி சாக்ரடீஸ் 'சாவுக்குப் பயப்படாத முதல் மனிதன்' மட்டுமல்லன்; இது போன்ற பல தகுதிகளுக்கும் அவன் உரிமையாளன்! அவன் பேச்சுகளிலும் சில நம் கருத்துகளுக்குப் புறம்பானவை என்று சிலர் கூறலாம். ஆனால் அறிவியக்கம் இந்தத் தூசு நிகர் காரணங்களைக் கொண்டு அவனை ஒதுக்கிவிடத் தயாராக இல்லை.

மூதறிஞர் இராஜாஜி 'ஸோக்ரதர்' எனும் நூலிலே சாக்ரடீசை சங்கராச்சாரியார் போன்ற ஆஸ்திகப் பழமாக்கி இருக்கிறார்.

நானோ அறிவுலக ஜோதியாக அவன் நடமாடியதை இந்தச் சிறு நாடகம் மூலம் இங்கே சித்தரித்து இருக்கிறேன்.

சபைன் என்னும் பேராசிரியர், ஜனநாயகத்தின் தொட்டிலாகிய ஏதென்சில், சாக்ரடீஸ் போன்ற பெரியார் ஒருவர் சாகடிக்கப்பட்டது வியப்பாக இருக்கிறது என்று கூறுகிறார். இதில் ஏதாவது திரைமறைவான அரசியல் இருக்குமோ என்றும் அய்யப்படுகிறார்.

இந்தப் பின்னணியோடு இனிப் படிக்க துவங்குங்கள்."

மேலே கலைஞர் எழுதிய நாடகங்களிலுள்ள இரண்டு பகுதிகள் தரப்பட்டுள்ளன. முதலாவது அவர் எழுதிய முதல் நாடகத்தின் ஒரு காட்சியின் சிறுதுளி. அதில் அவர் திராவிட இயக்கம் இதிகாசங்களை விமர்சிப்பதை நயமாகச் சொல்வதைப் பார்க்கலாம். இரண்டாவதாக அவர் சாக்ரடீஸ் எனும் ஓரங்க நாடகத்திற்கு எழுதிய அறிமுகவுரையை எடுத்துக் காட்டி இருக்கின்றோம். ஒரு பாத்திரத்தை-அதுவும் ஓரங்க நாடகப் பாத்திரத்தை அறிவுச் சிலிர்க்க,சிந்தனைக் கிளர்ச்சியுற எடுத்து வைக்கும் 'சுகாரம்பம்' ஒரு புலர்க்காலை பூபாளம் அல்லவா? உண்மையிலேயே வரலாற்றுப் பூர்வமாக அப்பாத்திரத்தின் தன்மையே அறிவார்ந்ததுதானே!

இதுவரை கலைஞரின் நாடகங்கள் ஒரு திரட்டாக வந்ததில்லை. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழக மேனாள் துணை வேந்தர் ம.ராசேந்திரன் குறிப்புப்படி 29 நாடகங்களைக் கலைஞர் எழுதியிருக்கிறார் என்று கூறியிருக்கிறார். ஆனால் இந் நாடகத் தொகுப்பில் 17 நாடகங்கள்தான் இடம் பெற்றுள்ளன. மேலும் பதிப்புரையில் சில கருத்துப் பிழைகள் இருக்கின்றன அவை வருமாறு:-

**(1)** 1967 ஆம் ஆண்டு தி.மு.கழகம் தமிழகத்தைக் கைப்பற்றியது அதனை அப்போது முதலமைச்சராக இருந்த பக்தவத்சலம், கூத்தாடிகள் ஆட்சியைப் பிடித்து விட்டார்கள்" என்று கூறியதாகப் பதிப்பாசிரியர் ந.முருகேச பாண்டியன் குறிப்பிட்டு இருக்கிறார். ஆனால் நாம் அறிந்த வரையிலே, "விஷக்கிருமிகள் பரவிவிட்டன" என்பதே பக்தவத்சலம் சொன்ன விமர்சனம். 'கூத்தாடிகள் ஆட்சியைப் பிடித்து விட்டார்கள்' என்று அவர் கூறவில்லை.

**(2)** கலைஞரின் படைப்புகளில் அச்சு வடிவில் வந்த முதல் புத்தகம் நச்சுக்கோப்பை நாடகம்தான் எனப் பதிப்புரை கூறுகிறது. இது சரியல்ல, கலைஞர் 'கிழவன் கனவு' எனும் எழுத்துருவை 1945-இல் எழுதினார். இதுதான் 1948-இல் புத்தகவடிவமாக வந்த கலைஞரின் முதல் நூல் ஆகும். இதற்கு 'டார்பிடோ' ஏ.பி. ஜனார்த்தனம் ஒரு முகவுரையை வரைந்திருந்தார்.



**க.திருநாவுக்கரசு**
**திராவிட இயக்க ஆய்வாளர்**

**(3)** இரத்தக் கண்ணீர் அல்லது மகான் பெற்ற மகன், அம்மையப்பன் ஆகியன ஒரு நாடகத்தின் பெயர்களே. ஒரு நாடகத்திற்குப் பல பெயர்கள் சூட்டப்பட்டன. இதைப் பற்றி பதிப்புரை இரண்டு இடத்தில் கருத்தை எடுத்து வைத்துள்ளது. அதை ஒரே இடத்தில் கூறியிருக்கலாம். இந்த நாடகத்தை 1953-ஆம் ஆண்டு கலைஞர் சிறையில் இருந்தபோது எழுதியதாகப் பதிப்புரைச் சொல்கிறது. கல்லக்குடிப் போராட்டம் செய்து சிறைத் தண்டனை பெற்ற கலைஞர் அந்த காலத்தில் எதுவும் எழுதியதாகப் பதிவுகள் இல்லை.

இதுவன்றி அம்மையப்பனைக் கலைஞர் திரைப்படமாக்க விரும்பினார். அதற்கு ஒரு தொடக்க விழா நடத்தினார். அம்மையப்பன் தான் இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.இராஜேந்திரன் முதன் முதலாகக் கதாநாயகனாக நடித்த திரைப் படம் ஆகும். இதற்கான தொடக்க விழா நடை பெற்றதை 16.07.1954 ஆம் தேதிய முரசொலி வார ஏடு பதிவு செய்து இருக்கிறது. இதில் என்ன வியப்பு என்றால் அந்த விழாவில் இரத்தக்கண்ணீர் நாடகம் என்றோ மகான் பெற்ற மகன் நாடகம் என்றோ அது சிறையில் எழுதியது என்றோ எதுவும் அந்நிகழ்ச்சியில் குறிப்பிடவில்லை. அம்மையப்பன் பற்றி மட்டுமே

அவ்விழாவில் பேசப்பட்டது. இக்கதையைத் தான் 'சுகம் எங்கே?' என்ற பெயரில் அம்மையப்பன் எடுக்கப்பட்ட காலத்திலேயே திரைப்படமாக்கப்பட்டு திரைக்கு வந்தது. இவ்விரண்டு படங்களும் ஒரே அடிப்படையைக் கொண்டது. கலைஞரின் கதைக் கருவைத் திருடி 'சுகம் எங்கே?' எனும் திரைப்படம் எடுத்தார்கள் என்பது அந்தக் காலத்தில் இது பெரும் சர்ச்சையாக்கப்பட்டது.

**(4)** பதிப்புரையில் பி.எல்.இராசேந்திரன் குறிப்பிடும் கலைஞரின் நாடகங்கள் நாரண துரைக்கண்ணன் எழுதியுள்ள கலைஞர் நாடகங்கள், பெரியார் தலைமை தாங்கி நடத்திய பிரேத விசாரணை எனும் நாடகம் ஆகியனவெல்லாம் பதிப்புரையாசிரியர் கூறும் கலைஞரின் நாடகங்களின் எண்ணிக்கையில் இடம்பெறவில்லை. ஆனால் பதிப்பாசிரியர் 29 நாடகங்களைப் பட்டியலிட்டு இருந்தால் இவையும் அடங்கும். ஆகையினால் பதிப்பாசிரியருக்கு அந் நாடகங்களைத் தனித்துக் குறிப்பிட வேண்டிய அவசியமாயிற்று.

**(5)**கலைஞர் நாடகங்கள் இரண்டாம் தொகுதியின் பொருளடக்கத்தில் முதலாவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் 'உதயசூரியன் (1977)' என இடம் பெற்று இருக்கிறது. அடைப்பில் (1958) - என்று இருந்திருக்க வேண்டும். நாடக உரையாடல்களைப் படித்தாலே எழுதிய காலத்தைக் கண்டறியலாம். ஏனோ '1977' என்று அச்சாகி இருக்கிறது. ஆனால் பதிப்புரையின் உள்ளே 1958இல் உதயசூரியன் நாடகம் அரங்கேற்றப் பட்டதைப் பதிப்பாசிரியர் எழுதி இருக்கிறார்.

**(6)**பதிப்பாசிரியர் பதிப்புரையை எழுதியது மட்டுமல்லாமல் கலைஞரின் நாடகங்கள் இடம் பெற்று இருக்கும் இரண்டு தொகுதிகளிலும் உள்ளவைகளுக்கு - அதாவது ஒவ்வொரு நாடகத்துக்கும் ஓர் அறிமுகவுரையை எழுதியிருக்கிறார். அது மிகச் சிறப்பாகவே அமைந்து இருக்கிறது. ஆனால் கலைஞரின் பரதாயணம் (குறுநாடகம்) நாடகத்திற்குப் பதிப்பாசிரியரால் எழுதப்பட்டுள்ள அறிமுகவுரைப் படிப்போருக்கு குழப்பத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கிறது. அந்த சிறிய அறிமுகவுரை பின்வரு மாறு:-

***மகாபாரதக் கதையில் ஒரு சிறிய பகுதியை எடுத்துத் தன் விருப்பம்போல் மாற்றியமைத்து குறு நாடகமாக்கியுள்ள கலைஞர், அதிலும் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்துள்ளார்.*** *அரசைத் துறந்து காட்டிற்குச் செல்லும் இராமன் விலை மதிப்பில்லாத மாணிக்கத்தைத் தனது செருப்பில் எடுத்து வைத்துச் சென்றான் எனவும் அதைக் கைப்பற்ற கைகேயி தந்த ஆலோசனையின் பேரில் பரதன் இராமனின் செருப்புகளை வாங்கி வந்தான் எனவும் இராமாயணக் கதையைக் கலைஞர் மறுவாசிப்புச்செய்துள்ளார், ஏற்கெனவே வழக்கினுள்ள இராமாயணக் கதையில் சிறப்பித்துச் சொல்லப்படும் பாதுகா அரியணை ஏறிய சம்பவத்தில் தனது கருத்துக்களைப் பகடியாக வெளிப்படுத்தியுள்ளார் கலைஞர்"*

மேலே குறிப்பிட்டுள்ள மேற்கோளில் இருக்கும் பகுதிதான் பரதாயணத்தின் அறிமுகவுரையாக இடம் பெற்று இருக்கிறது. முதலில் உள்ள நான்கு வரிகள் பரதனை மகாபாரதக் கதையாகச் சித்தரிக்கிறது. உண்மையில் பரதன் இராமாயணத்தில் வரும் பாத்திரம் அல்லவா? நான்கு வரிகளுக்குப் பிறகு வரும் வரிகள் அதை எடுத்துச் சொல்கின்றன. ஆனால் இந்த அறிமுகவுரையைப் படிப்பவர்கள் குழப்பமடைய மாட்டர்களா? குழப்பம் மட்டுமல்ல அதிர்ச்சியும் அடைவார்கள்.

**(7)** பதிப்பாசிரியர் ந.முருகேச பாண்டியன் 'வைதீக சநாதனம்' என்று எழுதுகிறார். சநாதனம் என்றாலே அது வேதம் சார்ந்த கருத்தியல் என்பது பெறப்படும். 'வைதீக சநாதனம்' எனும் சொற்றொடரின் பயன்பாடு வைதீகமல்லாத மற்றொரு சநாதனம் இருப்பதைப் போல் உணர்த்துகிறது. ஆகவே அப்படி எழுதியது சரியன்று என்பது எமது கருத்து. சநாதன தர்மத்தைப் பற்றி விளக்க வருகிற நூல் ஒன்றில், "Sanatana Dharma means the Eternal Religion, the Ancient Law, and it is based on Vedas, sacred books given to men many long ages ago" என்று சொல்லப்படுவதிலிருந்து சநாதனத்தின் தனித்த தன்மையைத் தெரிந்து கொள்ளலாம். எனவே சநாதனம் என்று எழுதினாலே போதுமானது.

***நூலின் கட்டடம் நீண்ட காலம் தாங்கக்கூடிய அமைப்பாகக் கட்டப்பட்டு இருக்கிறது. இரண்டு தொகுதிகளின் விலை ரூ.1450. பக்கந் தோறும் எளிதாகப் படிக்கத் தக்க அச்சின் மாட்சி, எழுத்தின் அளவு இடம் பெற்று இருக்கிறது. இப்படி அழகுற என்.சி.பி.எச். நிறுவனம் புத்தகங்களை உருவாக்கி இருக்கிறது.***

***இந்நூல்களைக் கழகத் தோழர்கள் மட்டுமன்றி நாடக விரும்பிகள், எழுத்தாளர்கள், ஆய்வாளர்கள் வாங்கி படித்தறிந்து இன்புறலாம். அந்தந்தக் கால நிலைகளையும் மொழி நடையையும், நாடக உத்திகளையும், பாத்திரப் படைப்புகளின் நோக்கத்தையும் அறியலாம். கலைஞர் தமது 19 வயது முதல் மரணப் பரியந்தம் வரை எழுதிக் கொண்டே இருந்தார். அந்த அனுபவ நிலையை எழுத்தின் ஒருமையை இந்நாடக நூல்களைப் படித்தறிவதன் மூலம் எளிதில் பெறலாம். பொதுவாகவே கலைஞரின் படைப்புகள் மலைவாழையைச் சுவைத்து உண்பதுபோல் இருக்கும். நூல்களை வாங்கி படித்துப் பாருங்கள் அதனை உணர்வீர்கள்.***




வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் தொடர்பாக அருப்புக்கோட்டையில் தனியார் திருமண மண்டபத்தில் வடக்கு தெற்கு ஒன்றிய திமுக வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் .கே.எஸ்.எஸ். ஆர்.ராமச்சந்திரன் கலந்து கொண்டு பேசினார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் விஜயகுமார், முன்னாள் ஒன்றிய சேர்மன் சுப்பாராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.




கழக தலைவர் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி கழக தேர்தல் பணிக்குழு தலைவர் தமிழ்நாடு வனம் மற்றும் கதர் கிராம தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதிகுட்ப்பட்ட ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கு வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர சீராய்வு(SIR) பற்றி ஆலோசனைகளை வழங்கினார். உடன் முதுகுளத்தூர் தொகுதி பார்வையாளர் வேல்முருகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.